# பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# அதிகாரமளிக்கப்படாத நிதித்தொழில் மற்றும் வைப்பு ஏற்றல்

## டபிள்யு ரி எஸ் இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிடெட்,

**வீரசிங்க தாரக சந்தருவான் வீரசிங்க**

மற்றும்

**துஷாரி புத்திகா விஜேயநாயக**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்பட்ட விசாரணையொன்றினைத் தொடர்ந்து இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, 2022.06.01 அன்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில் பின்வருமாறு தீர்மானித்துள்ளது என பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக சொல்லப்பட்ட சட்டத்தின் 42(10)ஆம் பிரிவின் கீழ் பொதுநலனுக்காக இவ்வறிவித்தல் வெளியிடப்படுகின்றது;

i. ஹொரோவபொத்தான, அழுத் ஓயா வீதி, ஏ12ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள டபிள்யுரிஎஸ் இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிடெட் (PV 00225992);

ii. அநுராதபுரம், ஹொரோவபொத்தான, ரலப்பனாவ, 35ஆம் இலக்கத்தில் வதிகின்ற டபிள்யுரிஎஸ் இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிடெட்டின் பணிப்பாளரொருவரான திரு. வீரசிங்க தாரக சந்தருவான் வீரசிங்க (912830357V);

iii. அநுராதபுரம், யாழ்ப்பாண வீதி, 64ஏ ஆம் இலக்கத்தில் வதிகின்ற டபிள்யுரிஎஸ் இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிடெட்டின் பணிப்பாளரொருவரான திருமதி. துஷாரி புத்திகா விஜேயநாயக (726201374V);

ஆகியோர் சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதித்தொழிலைக் கொண்டு நடாத்தியுள்ளனர். அத்துடன் வைப்புக்களை ஏற்றுள்ளனர்.

அதற்கமைய, மேற்குறித்த கம்பனியையும் தனியாட்களையும்;

i. முதலீட்டுத் திட்டங்களை வழங்குவதல் வாயிலாக அல்லது ஏதேனும் வேறு விதத்தில் மேலும் வைப்புக்களை ஏற்கக்கூடாது என்றும் நிதித்தொழிலைக் கொண்டு நடாத்தக்கூடாது என்றும்

அத்துடன்

ii. 2022.12.01ஆம் திகதிக்கு முன்னர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு கம்பனிப் பதிவாளர் நாயகத்துடனான கம்பனியின் பெயரை (டபிள்யுரிஎஸ் இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிடெட்) நீக்குதல் பற்றிய நிலையினை அறிவிக்குமாறும் அவசியமான சான்றினைச் சமர்ப்பிக்குமாறும்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை பணித்துள்ளது.

வைப்புக்களை அல்லது ஏதேனும் வேறுவடிவங்களில் நிதியங்களைக் கோருதல் மற்றும் திரட்டுதல், சொத்துக்களை கையுதிர்த்தல் / பாராதீனப்படுத்தல், ஏதேனும் கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர்பில் ஏதேனும் கொடுக்கல்வாங்கலைக் கைச்சாத்திடுதல் என்பவற்றிலிருந்து மேற்குறித்த கம்பனியை மற்றும் தனியாட்களைத் தடுக்கின்ற தடைக்கட்டளைகளை இலங்கை மத்திய வங்கி ஏற்கனவே வழங்கியுள்ளது.

**நாணயச் சபை**
**இலங்கை மத்திய வங்கி**

இலங்கை மத்திய வங்கி
இல: 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01

தொலைபேசி: 011-2477504, 011-2398860, 011-2398863 மின்னஞ்சல்: dsnbfi@cbsl.lk இணையத்தளம்: http://www.cbsl.gov.lk